# மண்சரிவினால் பாதிக்கப்பட்டு குடியேற்றப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் : பதுளை, கொஸ்லந்தை பிரதேசத்தை மையமாகக் கொண்ட ஆய்வு.

**A. இர்பானா..[1] , K. ஜீவதக்சா. [2] & MHM றினோஸ்..[3]**

*[1,2,3]புவியியற் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்*
*[1] rinonsmhm@gmail.com [2] jeevadacksha@gmail.com*
*[3] ishana25@gmail.com*

***ஆய்வுச் சுருக்கம்:*** *அதிக பாதிப்பை ஏற்படுத்தும் இயற்கை அனர்த்தங்களில் மண்சரிவும் ஒன்றாகும். மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்கள் அதிக உடல், உள, சமூக தாக்கங்களுக்கு உள்ளாவதோடு அவர்களின் வதிவிடங்களும் அழிக்கப்படுகின்றன. அவ் வகையில் இலங்கையில் 2014.10.29 அன்று மீரியபெத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற மண்சரிவானது பல பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. காலப்போக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புதிய வீடமைப்புத் திட்டங்கள் 2016ம் ஆண்டு மக்களிடம் கையளிக்கப்பட்டன. தற்காலத்தில் மக்களுக்கு தனித்தனி வீடுகள் வழங்கப்பட்ட போதிலும் அவை பூரணத்துவமின்றி காணப்படுகின்றன. இவ்வாய்வின் நோக்கமானது இப் புதிய வீடமைப்புத்திட்டத்தில் உள்ள பிரச்சினைகளை முன்வைத்தலும் அவற்றை தீர்ப்பதற்கான தீர்வுகளை வழங்குவதுமாகும். ஆய்வுக்குத் தேவையான தரவுகள் முதலாம் நிலைத்தரவு என்ற ரீதியில் வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானிப்பு, குழுக் கலந்துரையாடல் என்ற அடிப்படையிலும், இரண்டாம் நிலைத்தரவு என்ற ரீதியில் புதிய கொஸ்லந்தை வீடமைப்புத் திட்டம் பற்றிய பிரதேச செயலக புள்ளிவிபரவியல் அறிக்கை, கிராம சேவகர் புள்ளிவிபரத் திரட்டு, குடிசன மதிப்பீட்டுத் திணைக்கள புள்ளிவிபரங்கள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் என்பனவற்றிலும் சேகரிக்கப்பட்டன. இதன்படி ஆய்வுப் பிரதேசத்தில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளாக மின்சார வசதிகள் தகுந்த முறையில் செய்து கொடுக்கப்படாமை, சிறந்த வடிகாலமைப்பு வசதிகள் இன்மை, வீடுகளின் கூரைகள் சரியான முறையில் பொருத்தப்படாமை, போக்குவரத்து சார்ந்த பிரச்சினைகள், கல்வி நடவடிக்கைகள் சார்ந்த பிரச்சினைகள், பொருளாதார ரீதியிலான சிக்கல்கள், அரச கட்டிடங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் இல்லாமை, இடப்பற்றாக்குறை, குடும்ப உறவுகளில் ஏற்பட்டுள்ள விரிசல் என்பன காணப்படுகின்றன. இறுதியாக மேற்கண்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் முன்வைப்பதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.*

***திறவுச் சொற்கள் :*** *இயற்கை அனர்த்தம், மண்சரிவு, கொஸ்லந்தை வீடமைப்புத் திட்டம்*

## 1. அறிமுகம்.

உலகில் இயற்கை அனர்த்தங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமாகவே காணப்படுகிறன. அவற்றுள் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் இயற்கை அனர்த்தங்களில் மண்சரிவும் ஒன்றாகும். மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்கள் அதிக உடல் உளஇ சமுக ரீதியான தாக்கங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அதுமட்டுமன்றி மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான வதிவிடங்களும் அழிக்கப்படுகின்றன. இதேவேளை அழிக்கப்பட்ட வதிவிடங்களுக்கு தகுந்த குடியேற்றத்திட்ட நடவடிக்கைகளும் ஒவ்வொரு நாட்டிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதிக மண்சரிவுகள் இடம் பெறும் நாடுகள் வரிசையில் இலங்கையும் ஒன்றாகும். இலங்கையில் குறிப்பாக மலையகப் பகுதிகளில் இடம்பெறும் மண்சரிவுகளே அதிக பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. அவ்வகையில் கடந்த 2014.10.29 அன்று பதுளை மாவட்டத்தில் பெய்த பலத்த மழையினால் கொஸ்லந்தை மீரியபெத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற மண்சரிவானது பல பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. அந்த மண்சரிவில் ஏறத்தாழ 37 உயிர்கள் இறந்ததோடு 192 பேர் காணாமல் போயினர். 150 வீடுகள் அழிக்கப்பட்டன. மக்கள் நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டனர். மேலும் இம்மண்சரிவினால் ஆறு தோட்டக் குடியிருப்புகள்இ மூன்று அரசாங்கக் கட்டிடங்கள்இ இரண்டு பால் சேகரிப்பு நிலையங்கள்இ இரண்டு கடைகள் மற்றும் ஒரு கோயில்




ISBN 978-955-627-120-1

ஆகியன சேதமடைந்துள்ளன. (மண்சரிவு அனர்த்தம் பற்றிய அறிக்கை, 2014, ஹல்தமுல்லை பிரதேச செயலகம்)

பாதுகாப்பற்ற இடத்தில் பழைமையான லயன் குடியிருப்புக்களில இரண்டு நூற்றாண்டு காலமாக எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி வாழ்ந்து வரும் பெருந்தோட்ட மக்களின் அவலத்தை வெளிப்படுத்திய சம்பவமாக மீரியபெத்தை மண்சரிவு அனர்த்தம் காணப்பட்டது. காலப்போக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புதிய வீடமைப்புத்திட்டங்களை அமைத்துக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் அரசாங்க நிதி வழங்கலின் கீழ் மஸ்கெலிய பெருந்தோட்ட கம்பனியின் பூனாகலை பிரிவின் “மீரியபெத்தை மக்களுக்கு மீட்சி” எனும் கருப்பொருளில் 75 அலகுகளுடன் கூடிய புதிய வீடமைப்புத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் 1ம் திகதி பங்குனி மாதம் 2015 அன்று நடைபெற்றது. ஏறத்தாழ 23 மாதங்களின் பின்னர் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இந்தவீட்டுத்திட்டம் 2016 ஐப்பசி மாதம் 22ம் திகதி கௌரவ அமைச்சர் மதிப்பிற்குரிய அனுர பிரிய தர்‘ன யாபா அவர்களால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

மொத்தமாக 75 வீடுகள் அன்றைய தினம் மக்களிடம் கையளிக்கப்பட்டன. அடிப்படையில் இவ்வீடுகள் இரண்டு அறைகள் ஒரு சமையலறை மற்றும் மலசல கூட வசதி என்பனவற்றைக் கொண்டுள்ளன. அகதி முகாம்களில் வாழ்ந்த மக்களுக்கு தனித்தனி வீடுகள் வழங்கப்பட்ட போதிலும் அவை பூரணத்துவமின்றி காணப்படுகின்றன. மண்சரிவினால் தமது உடைமைகளையும் இழந்த நிலையில் இரண்டு வருடங்களாக முகாம்களில் சொல்லொனாத் துயரங்களை அனுபவித்து பல போராட்டங்கள், தொடர்ச்சியான கோரிக்கைகளையடுத்து தமக்கு வழங்கப்பட்டுள்ள வீடுகளில் வாழ்வதற்கே மக்கள் அச்சப்படுகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் மண்சரிவிற்கு பின்னரான குடியேற்றத்திட்டங்களில் மக்கள் எதிர்கொள்ளும் சவால்களை முன்வைப்பதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது.




## 1.1. ஆய்வுப் பிரதேசம்.

வரைபடம் 1.1 ஆய்வுப் பிரதேசம்.

ஊவா மாகணத்தின் பதுளை மாவட்டத்தின் ஹல்தமுல்லை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கொஸ்லந்தை எனும் பிரதேசமானது $6^0$ 48’ 09’’ வடக்கேயும், கிழக்கே $80^0$ 59’ 55’’ற்கும் இடையில் அமைந்துள்ளது. இங்கு சுமார் 75 புதிய வீடுகள் உள்ளன. அத்தோடு 95 குடும்பங்கள் வசிக்கின்றனர். கொஸ்லந்தை பிரதேசம் தேயிலைச் செய்கையை பிரதான வாழ்வாதாரத் தொழிலாகவும் கொண்டிருப்பதன் காரணமாக அதிகமான தேயிலைத் தோட்டங்கள் இயங்கி வருகின்றன. கடல் மட்டத்திலிருந்து உயரம் ஏறக்குறைய 1400 அடிகளாகும். வருடாந்த மழைவீழ்ச்சி 2000 - 2500 அஅ ஆகும். வெப்பநிலை 20 – 26ழஊ வரையாகும்.

***மூலம் : ஆய்வாளன்.***



ISBN 978-955-627-120-1

### 1.2 ஆய்வு பிரச்சினை.

மண்சரிவு என்பது திடீரென ஏற்படும் இயற்கை அனர்த்தமாகும். இந்த மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பல்வேறு குடியேற்றத்திட்டங்களை இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இருந்தபோதிலும் மீரியபெத்தை மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள புதிய வீடமைப்புத்திட்டங்களில் குறுகிய காலத்திலேயே பல சவால்களை எதிர்நோக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். எனவே அம்மக்கள் எவ்வகையான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் எனும் வினாவுக்கு விடை காண்பதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

## 2. ஆய்வு முறையியல்.


அடிப்படையில் இந்த ஆய்வு எண்சார்ந்த ரீதியிலும் பண்பு சார்ந்த ரீதியிலும் தரவுகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இந்த ஆய்வுக்குத் தேவையான தகவல்கள் முதலாம் நிலைத்தரவு என்ற ரீதியிலும் இரண்டாம் நிலைத்தரவு என்ற ரீதியிலும் சேகரிக்கப்பட்டன. முதலாம் நிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்ள வினாகொத்து, நேர்காணல், குழுக் கலந்துரையாடல் என்பன பயன்படுத்தப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகள் புதிய கொஸ்லந்தை வீடமைப்புத் திட்டம் பற்றிய பிரதேச செயலகப் புள்ளிவிபரவியல் அறிக்கை, கிராம சேவகர் புள்ளிவிபரத் திரட்டு, குடிசன மதிப்பீட்டுத் திணைக்கள புள்ளிவிபரங்கள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் என்பவற்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன.

இதில் ஆய்வுக்கு தேவையான வினாக் கொத்துக்கள் அங்குள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் ஒரு வினாக்கொத்து என்ற முறையில் 75 வீடுகளுக்கும் நோக்க மாதிரி அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டன. 05 பேர் நேர்காணலுக்காக தெரிவு செய்யப்பட்டனர். அவற்றில் கிராம அலுவலகர் - 01, பொறியியலாளர் - 01, பாதிக்கப்பட்டமக்கள்- 02, பாடசாலை மாணவன் - 01 ஆகியோர் உள்ளடக்கப்பட்டனர். பெறப்பட்ட தகவல்கள் ஆளு நுஒஉநடஇ யுசஉ புஐளு போன்ற மென்பொருட்களை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டது.

## 3. பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்.

''மலையகத்தின் மாதிரி கிராமம்'' எனும் தொனிப்பொருளுடன் உருவாக்கப்பட்ட கொஸ்லந்தை புதிய வீடமைப்புத் தொகுதியில் 'அடிப்படைப் பிரச்சினைகள் உள்ளனவா?' என்ற வினாவுக்கு விடையாக பகிர்ந்தளிப்பட்ட வினாக்கொத்துக்களின் விடையானது பின்வருமாறு அமைந்திருந்தது.

*வரைபடம் 3.1 அடிப்படை பிரச்சனைகள் பற்றிய பகுப்பாய்வு.*




*மூலம் : கள ஆய்வுத் தரவு*



ISBN 978-955-627-120-1

மேற்குறிப்பிட்ட புதிய வீடமைப்புத் திட்டத்தில் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- சிறந்த வடிகாலமைப்பு வசதிகள் இன்மை.

வீட்டின் கழிவுகளை வெளியேற்ற வடிகால் அமைப்பு முறைகள் தகுந்த முறையில் செய்து கொடுக்கப்படல் வேண்டும். ஆனால் இப்பிரதேசத்திலுள்ள வடிகால் அமைப்பு முறைகள் சீரற்ற முறையில் அமைந்திருப்பதை நேரடியாக அவதானிக்க முடிந்தது. வீடுகளின் கழிவு நீரை வெளியேற்றுவதற்காக எவ்வித வசதிகளும் அங்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. மேலும் ஒவ்வொரு வீடுகளிலுமிருந்தும் வெளியாகும் கழிவு நீர் நேரடியாக தரையுடன் தொடர்புறுகிறது. பொதுவாகவே அப்பிரதேசமானது மண்சரிவு ஏற்படும் அபாயம் மிக்க பிரதேசமாக கருதப்படுகிறது. மழைக்காலங்களில் வீட்டிலிருந்து வெளியேறும் நீர், மழை நீர் என்பன சேர்ந்து வெளியேறுவதால் அப்பகுதியில் மண்சரிவு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன.



*படம் 3.1: வடிகாலமைப்பு முறைகளில் உள்ள சிக்கல்கள்.*

- மின்சார வசதிகள் தகுந்த முறையில் செய்து கொடுக்கப்படாமை.

தற்காலத்தில் மனித குடியிருப்புகளில் மின்சார வசதி என்பது இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகிறது. ஆனால் கொஸ்லந்தை பிரதேச புதிய வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடுகளில் மின்சார வசதி சார் பிரச்சினைகள் காணப்படுகின்றன. மேலும் ஒரு ஆளியிலேயே அங்குள்ள இரு அறைகளின் மின்குமிழ்கள் ஒளிர்வதற்கான மின்சார வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தேவையற்ற நேரத்திலும் கூட மின்குமிழ்கள் ஒளிர்வதனால் அங்குள்ள மக்களின் மின்சார கட்டணம் அதிகரிப்பதாகவும், மின்சார வீண்விரயம் ஏற்படுவதாகவும் மக்கள் தெரிவித்தனர். மேலும் சில வீடுகளில் இடருமுடரான மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருப்பதையும் குறிப்பிட முடியும்.



*படம் 3.2: இடருமுடரான மின்சார வசதி.*

- வீடுகளின் கூரைகள் சரியான முறையில் பொருத்தப்படவில்லை.



ISBN 978-955-627-120-1

மலையகப் பகுதியில் உள்ள வீடுகளின் கூரைகள் பொதுவாக உயரம் குறைந்தவையாகவே காணப்படும். ஆனால் இவ் வீடுகளில் உள்ள கூரைகளில் சுமார் 75  மூ வீடுகளில் கூரைகளின் உநறடலைப பொருத்தப்படாமல் உள்ளது. பொதுவாகவே அப்பிரதேசம் குளிரான காலநிலையைக் கொண்ட பிரதேசம் என்பதால் ஒக்டோபர் - டிசம்பர் மாதங்களில் வீடுகளில் வசிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. மேலும் மாரி காலப் பகுதிகளில் பொழியும் அடைமழையினால் வீட்டினுள் வரும் மழைத்தூறல் காரணமாக மக்கள் பல சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். இதேவேளை சிறுவர்களுக்கு அதிகமாக நோய்கள் ஏற்படுவதோடு மக்களின் அன்றாட வாழ்க்கை முறைமையும் பாதிக்கப்படுகிறது.



*படம் 3.3: உயரமான மற்றும்* உநறடலைப *பொருத்தப்படாத கூரை.*

- போக்குவரத்து சார்ந்த பிரச்சினைகள்.

மனித குடியிருப்புகளில் போக்குவரத்து வசதி என்பது மிக முக்கியமான அம்சமாகும். கொஸ்லந்தை பிரதேச புதிய வீடமைப்புத் திட்டத்தில் போக்குவரத்து முறைமை என்பது அங்குள்ள மக்களுக்கு பாரிய பிரச்சினையாகவே காணப்படுகிறது. மேலும் அப்பிரதேசத்திலுள்ள மக்கள் தமது அன்றாட தொழில்களுக்கே பேரூந்து பயணத்தினை மேற்கொள்ள வேண்டியுள்ளனர். அதுமட்டுமன்றி அப்பிரதேசத்திலுள்ள ஏறக்குறைய நூற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவியர் தமது கல்வி நடவடிக்கைகளை பேரூந்திலேயே சென்று மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. மேலும் புடைவை தொழிற்சாலை போன்றவற்றில் தொழில் புரியும் இளைஞர் யுவதிகள் யாவரும் பேரூந்திலேயே செல்லவேண்டும். இத்தகைய பாரிய சனத்தொகையிலான மக்கள் பயணிக்க வேண்டிய தருனத்தில் அன்றாடம் மக்கள் பயணிப்பதற்கு இலங்கை போக்குவரத்து சபையினால் அனுமதிக்கப்பட்ட ஒரு அரச பேரூந்து மாத்திரமே உள்ளது. மேலும் அப்பிரதேசத்தில் வீதிகள் சரியான முறையில் செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுவதால் வேறு வாகனங்களையும் பயன்படுத்த முடியாத நிலைமையும் உள்ளது. அது மட்டுமன்றி மக்களுக்காக தகுந்த பேரூந்து நிலையமும் இல்லாமல் மக்கள் அல்லலுறுகின்றனர். மேலும் மண்சரிவு ஏற்படுவதற்கு முன்னர் அதிகமானோரிடம் சொந்த வாகனங்கள் இருந்ததாகவும் தற்போது 23மூ சொந்த வாகனங்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.





*படம் 3.4 : பிரதேச பாதையின் சீரற்ற தன்மையும் பேரூந்து நிலையமும்.*

- அரச கட்டிடங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் இல்லாமை.




ISBN 978-955-627-120-1

மண்சரிவு ஏற்பட முன்னர் மீரியபெத்தை பகுதிகளில் வசித்த மக்களில் பெரும்பாலான பெண்கள் தோட்டப் புறங்களிலேயே வேலை செய்தனர். இதனால் தம் குழந்தைகளை விட்டுச் செல்வதற்கு அரச அனுமதி பெற்ற சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் இருந்தன. ஆனால் தற்காலத்தில் புதிய வீடமைப்புத் திட்டத்தில் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் இல்லாமையினால் பெற்றோர் அதிக சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். மேலும் அங்கு சனசமூக நிலையம் இல்லாமை, பொது விளையாட்டு மைதானம் இல்லாமை, மக்களின் ஆன்மீக சிந்தனையை வளர்க்கும் வழிபாட்டுத் தலங்கள் மிகத் தொலைவில் காணப்படுகின்றமை, தபாற் கந்தோர், மொத்த கூட்டுறவு விற்பனை நிலையம், அரச வைத்தியசாலை என்பன இல்லாமையால் மக்களின் அவசர தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொளள முடியாதுள்ளது.

- கல்வி நடவடிக்கைகள் சார்ந்த பிரச்சினைகள்.

மண்சரிவினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றப்பட்ட மக்களின் கல்வி நடவடிக்கைகளிலும் பல பிரச்சினைகள் உள்ளன. ஏறக்குறைய நூறு மாணவ மாணவியர் தம் கல்வியை தொடருகின்றனர். இவர்களுக்கு அருகில் உள்ள கொஸ்லந்தை ஸ்ரீ கணே'ா தமிழ் மகா வித்தியாலயம் 6 மு.அ தொலைவிலும் பூனாகலை தமிழ் மகா வித்தியாலயம் 7 மு.அ தொலைவிலும் உள்ளது. இதேவேளை அங்குள்ள மாணவர்கள் உயர் தரத்தில் தொழிநுட்பவியல், கணிதம், விஞ்ஞானம் போன்ற பிரிவுகளில் தம் கல்வியை தொடர வேண்டுமாயின் ஏறக்குறைய 29.8 மு.அ தொலைவிலுள்ள அப்புத்தளை தமிழ் மத்திய கல்லூரிக்கும் 34.8 மு.அ தொலைவிலுள்ள பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரிக்கும் சென்று தம் கல்வியை தொடர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் திறமை இருந்தும் பல மாணவர்கள் கலை, வர்த்தக பிரிவுகளில் தம் கல்வியைத் தொடருவதாகவும் சிலர் வறுமை காரணமாக சாதாரன தரத்துடன் கல்வியை இடை நிறுத்துவதாகவும் தெரிவித்தனர். மேலும் மேலதிக வகுப்புகளுக்கு செல்வதற்கு பேரூந்து பிரச்சனை காரணமாக மாணவர்கள் பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அங்குள்ள மாணவர்களின் கல்வி நிலை பற்றிய தகவல்கள் வினாக்கொத்து மூலம் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

*வரைபடம் 3.2 கொஸ்லந்தை புதிய வீடமைப்புத் திட்டத்தில் உள்ள மாணவர்களின் கல்வி நிலை*




*மூலம் : கள ஆய்வுத் தரவு.*

- பொருளாதார ரீதியான சிக்கல்கள்

மண்சரிவு ஏற்படுவதற்கு முன்னர் அப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்களின் பிரதான தொழிலாக தேயிலையை நம்பிய வாழ்க்கை முறை இருந்தது. இதன் மூலம் இவர்களின் வருமானம் போதாமையின் காரணமாக சில மேலதிக பொருளாதார நடவடிக்கைகளும் காணப்பட்டன. உதாரணமாக :- கால்நடை வளர்ப்பு, மரக்கறி பயிர்ச்செய்கை என்பன காணப்பட்டன. ஆனால் மண்சரிவுகளில் பாதிக்கப்பட்டு மீள் குடியேற்றப்படுவதன் பின்னர் அம்மக்கள் தேயிலை கொழுந்து பறித்தல் போன்ற தம் தொழிலுக்கு பல கிலோமீற்றர் தூரம் நடந்து செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதோடு, அவர்களின் உபதொழிலையும் செய்யமுடியாதுள்ளது. மேலும்,



ISBN 978-955-627-120-1

அத்தகைய தொழிலை இடப்பற்றாக்குறை, மண்வளம் இன்மை, நீர்பற்றாக்குறை போன்ற காரணிகளால் செய்ய முடியாது போவதாகவும் மக்கள் தெரிவித்தனர். இதனால், மக்களின் வறுமைநிலை மேலும் அதிகரித்துள்ளதாகவும், சில குடும்பங்களில் மாணவர்கள் தம் கல்வியை இடைநிறுத்தி நகர்ப்புறங்களுக்கு வேலைகளுக்கும் செல்ல எத்தனிப்பதகவும் தெரிவிக்கப்பட்டது.

- இடப்பற்றாக்குறையும், குடும்ப உறவுகளில் ஏற்பட்டள்ள விரிசலும்.

பொதுவாகவே இந்திய வம்சாவளி மக்கள் கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறைக்கு பழக்கப்பட்டவர்கள். லயன் முறைகளில் அடுத்தடுத்த வீடுகளில் வாழ்ந்து வருபவர்கள். மீரியபெத்தை பகுதிகளில் மண்சரிவு ஏற்படுவதற்கு முன்னர் வாழ்ந்த இந்திய வம்சாவளி மக்கள் கூட்டுக்குடும்பமாகவே வாழ்ந்தனர். இதனால் அவர்கள் மத்தியில் சிறந்த உறவு முறை காணப்பட்டது. ஆனால் அணர்த்தத்தின் பின்னர் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் தனித்தனி வீடுகளில் வசிப்பதனால் குடும்ப உறவுகளில் விரிசல் நிலை ஏற்பட்டுள்ளதோடு அப்பிரதேச மக்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீட்டின் அளவுத்திட்டம் 22 அடி நீளமாகவும் 23 அடி அகலமாகவும் (7 பேர்ச்சஸ்) காணப்படுவதால் மக்களுக்கு சிறு வீட்டுத்தோட்டம் கூட செய்யமுடியாத நிலைமை உருவாகியுள்ளதால் தமது முழு உழைப்புப் பணத்தினையும் உணவு மற்றும் மரக்கறிகளுக்காகவே செலவிட வேண்டிய நிலைமை அங்குள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.



*படம் 3.5 : இடப்பற்றாக்குறையுள்ள வீட்டின் மாதிரி அமைப்பு.*

**4. முடிவுரை.**

மண்சரிவினால் பாதிக்கப்பட்டு தமது உடைமைகளை இழந்து மீள் குடியேற்றத்திட்டத்திற்குள் உட்புகுந்த மக்கள் தமது புதிய வீட்டுத்திட்டங்களில் சொல்லொனாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இருப்பினும் இப் புதிய வீட்டுத்திட்டத்தின் பிரச்சினைகளை குறைக்க பின்வரும் தீர்வுத் திட்டங்களை முன்வைக்க முடியும்.

✓ மின்சார வசதிகள் தகுந்த முறையில் செய்து கொடுத்தல்.

✓ வீடுகளை நிர்மாணிக்கும் முன்னரே வீட்டுச் சூழல் பற்றிய சூழல் தாக்க மதிப்பீடுகளை சரியாக மேற்கொள்ளல்.

✓ வடிகால் அமைப்பு முறைகளை சரியான முறையில் ஏற்படுத்திக் கொடுத்தல்.



ISBN 978-955-627-120-1

- ✓ அப்பிரதேசத்தில் எதிர்காலத்தில் சிறுவர் பராமரிப்பு நிலையம், சன சமூக நிலையம், தபாற் கந்தோர், மொத்த கூட்டுறவு விற்பனை நிலையம், அரச வைத்தியசாலை, பேரூந்து நிலையம் என்பனவற்றை உருவாக்க வழிவகைகளை மேற்கொள்ளல்.

- ✓ அப்பிரதேச வீதிகளை சீரமைப்பதோடு பேரூந்து சார் பிரச்சினைகளுக்கு தகுந்த தீர்வுகளை வழங்கல்.

- ✓ அப் பிரதேச மாணவர்களின் கல்வி சார் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கல்.

**5. உசாத்துணை.**


CONSTRUCTION-OF-75-HOUSES-FOR-MEERIYABADDE-LANDSLIDE-VICTIMS-COMMENCES (2015). RETRIEVED SEPTEMBER 01, 2017 FROM HTTP://WWW.DAILYMIRROR.LK/71637/ 10/12/2015:02.56 PM

HOUSING PROJECT FOR MEERIYABEDDE LANDSLIDE VICTIMS (2014). RETRIEVED SEPTEMBER 02, 2017 FROM RELIEFWEB.INT/.../HOUSING-PROJECT-MEERIYABEDDE-LANDSLIDE-VICTIMS.

HOUSING REMAINS CRITICAL FOR INDIAN ORIGIN TAMIL PLANTATION WORKERS. (2015). RETRIEVED SEPTEMBER 03, 2017 FROM ASIANMIRROR.LK/NEWS/.../8587-.

MEERIYABEDDA RESIDENTS REQUEST ANOTHER SAFE LOCATION TO LIVE. (2016). RETRIEVED SEPTEMBER 02, 2017 FROM HTTP://WWW.ADADERANA.LK/NEWS.PHP?NID=35129.

MEERIYABEDDA VICTIMS ENTER ARMY BUILT NEW HOUSES (2016). RETRIEVED SEPTEMBER 03, 2017 FROM HTTP://WWW.ARMY.LK/NEWS/MEERIYABEDDA-VICTIMS- ENTER-ARMY-BUILT-NEW-HOUSE ACCESSED ON 02.09.2017.

PLANTERS ASSOCIATION ISSUES AN URGENT STATEMENT ON LANDSLIDES (2015). RETRIEVED SEPTEMBER 01, 2017 FROM 20 FROM HTTPS://WWW.NEWS.LK/NEWS/

VLAEMINCK, P. MAERTENS, M. & ISABIRYE (2014). AGRICULTURE IN AN INTERCONNECTED WORLD .COPING WITH LANDSLIDE RISK THROUGH PREVENTIVE RESETTLEMENT, DESIGNING OPTIMAL STRATEGIES THROUGH CHOICE EXPERIMENTS FOR EAST UGANDA RETRIEVED AUGUST 28, 2017 FROM HTTP://AGECONSEARCH.UMN.EDU/BITSTREAM/232715/2/BIOECONWP2015_04_SUBMITTE D.PDF.




ISBN 978-955-627-120-1